# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் – 01.07.2026</u>

**<u>(காணொளி காட்சி விசாரணை)</u>**

## <u>முன்னிலை</u>

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 4696/A/2023</u>**

திரு.P.மூர்த்தி -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக
உதவியாளர் (நிலம்), -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு.P.மூர்த்தி அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திருமதி.த.மலர்<br>பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), திருப்பூர் அவர்கள் ஆஜராகவில்லை<br><br>தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 8(2)-ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது.<br><br>திரு.க.மாரிமுத்து,<br>துணை வட்டாட்சியர் / தலைமை உதவியாளர், ஆ பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் அவர்கள் நேரில் ஆஜரானார். |

<table>
<tr><td>சட்டப் பிரிவு 6(1) மனு நாள்</td><td colspan="2">26.02.2023</td></tr>
<tr><td colspan="3">மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கூடுதல் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடிதம் எண்.பி2/6026/2016, 31.03.2016 நாளிட்ட ஆவணத்தின் நகல் உட்பட 3 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார்.</td></tr>
<tr><td colspan="2">சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள்</td><td>----</td></tr>
<tr><td colspan="2">பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள்</td><td>28.08.2023</td></tr>
<tr><td colspan="2">பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள்</td><td>18.09.2023</td></tr>
<tr><td colspan="2">மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள்</td><td>----</td></tr>
<tr><td colspan="2">பிரிவு 18(1)-ன்கீழ் புகார் மனு நாள்</td><td>07.02.2024</td></tr>
</table>

2. இன்றைய தின விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலரின் சார்பாக ஆஜரான திரு.க.மாரிமுத்து, துணை வட்டாட்சியர் / தலைமை உதவியாளர், ஆ பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ந.க.15146/2024/ஆ1, 20.08.2024 மற்றும் ப.மு.15146/2024/ஆ1, 27.09.2024 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அவற்றின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், பொதுத்தகவல் அலுவலரால் தனக்கு உரிய காலத்தில் தகவல்கள் வழங்கப்படவில்லை எனத்தெரிவித்து தனக்கு உரிய காலத்தில் தகவல்களை வழங்காத பொதுத்தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்படி அபராதமும், துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்குமாறு ஆணையத்தைக் கோரினார்

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், உரிய காலத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு 30 நாட்களுக்குள் தகவல் அளிக்காமல் 40 முதல் 45 நாட்கள் கழித்து தகவல் அளித்துள்ளது தெரிய வருகிறது. எனவே ஆணையம் இன்றைய விசாரணையின் முடிவில் பின்வருமாறு உத்தரவிடுகிறது :-

- ***மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் மீது தகவல் அறியும் உரிமை சட்டம், 2005, பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 29.07.2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இக்கடிதத்தினை சார்வு செய்ய தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4696/A/2023</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத்தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் - 641 604.

**<u>மனுதாரர்</u>**

திரு. P.மூர்த்தி,
1/88,தேவராயன்பாளையம்,
இச்சிப்பட்டி அஞ்சல்,
சோமனூர் வழி,
பல்லடம் தாலுகா,
திருப்பூர் - 641 668.

Copy to file

KRM/PA 01.07.2026